1992 ஏப்ரல் 1]

திரு, இரா, புதுநயினார் ஆதித்தன் : தற்போதுள்ள நிதி நிலைமையைப் பற்றி, நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் இந்த அவையில் மிகத் தெளிவாக, புள்ளி விவரத்துடன் கூறியுள்ளார்கள், ஆனாலும், நம்முடைய ஒப்பற்ற தலைவி, புரட்சித் தலைவி அவர்களுடைய நிர்வாகத் திறனால், நிதி நிலையை சரிசெய்வார்கள் என்ற நம்பிக்கை உள்ளது. அப்படி நிதி நிலை ஆதாரத்தை சரி செய்தவுடன் அந்த நேரத்தில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்திற்கு முன்னுரிமை கொடுத்து, நிறைவேற்றித் தருவார்களா என அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே குறிப்பிடப்பட்டு இருக்கிற பாலம் வீரவநல்லூருக்கும், முக்கூடலுக்கும் இடையே, தாமிரபரணி ஆற்றின் குறுக்கே கட்டப்பட வேண்டிய பாலம். இப்பாலத்தினுடைய நீளம் 300 மீட்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் உங்களிடம் நேரிடையாகக் கேட்கிற கேள்வி, நிதிநிலைமை சரியானதற்குப் பிறகு கட்டித் தருவீர்களா என்பது.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : தற்போதைய மதிப்பு, 2 கோடி ரூபாய், ஆகவே, அதற்கு சாத்தியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் தற்போது கேட்கவில்லை, எங்களுடைய புரட்சித் தலைவி காலத்தில், இந்தத் திட்டத்தை என் தொகுதிக்கு செய்து தருவரர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்ளே, இதுபற்றி நிதிநிலைமைக்கு ஏற்ப பின்னர் பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண், 424., திரு, கே, செல்வராஜ், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

424—

குளம், குட்டைகளை ஆழப்படுத்துதல்,

*3721—திரு. கே. செல்வராஜ் :—
மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா,

(அ) பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான குளம், குட்டைகளை ஆழப்படுத்தி, தூர் எடுத்து மழைநீர் பிடிப்புக்கு வகை செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): குளங்களைப் பொறுத்த வரையில் விதிமுறைக்கு உட்பட்டு தூர் வாரும் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன, குட்டைகளைப் பொறுத்தவரையில், மழைநீர் பிடிப்புக்கு தக்கவாறும், பாசனத்திற்கு தக்கவாறும் ஆழப்படுத்தி, தூர் எடுக்க மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டதில், பயனீட்டுச் செலவு விகிதம் மிகவும் குறைவாக உள்ளதால், தூர் வாரும் திட்டங்களை எடுப்பதில்லை,

திரு, கே, செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான குளங்கள் மற்றும் குட்டைகளில் தூர் எடுக்கும் திட்டம் இப்போது இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்தக் குளம், குட்டைகளில் இப்போது மண் மூடி மேடாகக் கிடக்கின்ற காரணத்தால், தூர் எடுக்காமல் உள்ள சூழ்நிலையில் மழை நீர் வீணாகின்றபோது, விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். விவசாயப் பகுதிகளில் குளம். குட்டைகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால். இந்த ஆண்டில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றாவிட்டாலும் கூட, வரும் நிதியாண்டிலாவது நிறைவேற்ற அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததைப் போல, குளங்களைப் பற்றி. தூர் எடுக்கவில்லை என்று நான் சொல்லவில்லை, குளங்களைப் பொறுத்தவரையில் பொதுப்பணித் துறையின் மூலம், இருக்கின்ற நிதி ஆதாரங்களை வைத்து, தூர் எடுத்துக் கொண்டிருக்கிறோம், குட்டைகளைப் பொறுத்த வரையில், பாசனப் பரப்பினுடைய கணக்கை எடுத்துக் கொண்டு பார்க்கிறபோது, பலன் — விகிதாச்சார குறைவாக இருக்கின்ற காரணத்தால், குட்டைகளைப் பொறுத் வரையில், தூர் எடுக்கவில்லை என்று சொன்னேன், ஆகவே, குளங்களைப் பொறுத்தமட்டிலும் பொதுப்பணித் துறையிலே இருக்கின்ற நிதி ஆதாரங்களை வைத்துக்கொண்டு அந்தந்த ஆண்டு பணிகள் செய்யப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.

முற்பகல் 10-05

திரு, கே, செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பெரிய, சிறிய குளங்கள் எவ்வளவு இருக்கின்றன? எவ்வளவு குளங்கள் இந்த ஆண்டு எடுத்துக் கொண்டு பணிகள் செய்யப்படும்? எவ்வளவு குட்டைகள் இருக்

[1992 ஏப்ரல் 1]
கின்றன? எவ்வளவு குட்டைகளை இப்போது எடுத்துக் கொண்டு தூர் எடுக்கின்ற பணிகள் முறைப்படுத்தப்பட உள்ளன என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளங்களைப் பொறுத்தமட்டில் ஏறத்தாழ 35,000 குளங்களுக்கு மேல் இருக்கின்றன என்பதை நேற்றே நான் பதிலில் சொல்லியிருக்கிறேன், பொதுப் பணித் துறையைப் பொறுத்தமட்டில் 8,500 குளங்களுக்கு மேலே, அதாவது 100 ஏக்கருக்கு மேலே இருக்கின்ற குளங்கள் இருக்கின்றன, குட்டைகளைப் பொறுத்த மட்டில் அந்த விவரங்கள் தற்போது என்னிடத்தில் இல்லை, ஆகவே அதைப் பற்றித் தனிக் கேள்வியாகப் போட்டால் அதற்கு பதில் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஜெ. பரந்தாமன்,

டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளம், குட்டைகளை ஆழப்படுத்த பள்ளி மற்றும் கல்லூரி. என்.எஸ்.எஸ்., என்.எஸ்.சி. ஸ்கௌட்டில் பங்கேற்றுள்ள மாணவர்களின் சேவையைப் பயன்படுத்திக் கொள்ளும் திட்டம் அரசுக்கு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குக் கூட அப்படிச் சாலைகளை ஏற்படுத்துகின்ற பணிகளில் எல்லாம் என்.எஸ்.எஸ். என்று சொல்லப்படுகின்ற அந்த நிறுவனங்கள் மூலமாக வருகின்ற நேரத்தில், ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இதுபோன்ற கோரிக்கைகள் அரசுக்கு வந்தால் அரசு அதற்குத் தக்க முறையில் ஆவன செய்து ஏற்பாடு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. நா. சா. பழனிசாமி.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளம், குட்டைகள் மூலமாகத்தான் கிணறுகளுக்கு நீர் பிடிக்கின்ற வாய்ப்புகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட குளம், குட்டைகளை இப்போது ஆக்கிரமித்து, ஒரு சிலர் அந்தக் குளத்திற்கே தண்ணீர் வராமல் செய்துகொண்டிருக்கிறார்கள். அந்தக் குளத்திற்குள்ளேயே விவசாயம் கூட சிலர் செய்து கொண்டு வருகிறார்கள். .... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பழனிசாமி எப்போதுமே நீங்கள் உரையாற்ற ஆரம்பித்து விடுகிறீர்கள். துணைக் கேள்வி. ஆக்கிரமிப்புகள் அகற்றப்படுமா என்பதை மட்டும் கேளுங்கள்.

திரு. நா. சா. பழனிசாமி : எனவே, அந்தக் குளங்களிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்குப் பொதுப்பணித் துறை பொறியாளர்களுக்குப் போதிய அதிகாரம் கொடுத்து, அந்த ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்ற நேரத்திலே ஏறத்தாழ 12,000 எக்டேருக்கு மேலே உள்ள இடங்களில் ஆக்கிரமிப்புகள் இருந்தன. இன்றைக்கு நம்முடைய அரசினுடைய கடுமையான நடவடிக்கைகளின் பேரில் ஏறத்தாழ 3,500 எக்டேருக்கு மேல் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டிருக்கின்றன. மீதமிருக்கின்ற ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது. ஏற்கெனவே பொதுப்பணித் துறை பொறியாளர்களுக்கு அந்த அதிகாரம் இருக்கிறது. ஆகவே புதிதாக அதிகாரங்கள் ஏதும் கொடுக்கப்பட வேண்டியதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆக்கிரமிப்புகளை அகற்ற இந்த அரசு முறையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இரா. நடேசன்.

திரு. இரா. நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளம், குட்டைகளைத் தூர் எடுப்பது போல் பல ஆண்டுகளாகத் தூர் எடுக்காமல் இருக்கின்ற எங்கள் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளில் தூர் எடுக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழ்நாட்டிலே இருக்கின்ற அணைகளில் மண் மூடுவதன் காரணமாக அதைத் தூர்வாரி எடுக்கின்ற ஒரு திட்டம் இருக்கிறது. அணைகளை மேம்படுத்துவதற்காக ஆண்டாண்டுதோறும் நாம் பணங்களை ஒதுக்கிக் கொண்டிருக்கிறோம். ஆகவே இப்படி அணைகளில் தூர் எடுக்கின்ற திட்டமும் அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. தேவைக்கேற்ப அந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 425. திரு. கி. பாலசுப்பிரமணியன், மாண்புமிகு பொதுப்பணித் **துறை அமைச்சர்.**